செய்தி வெளியீடு எண் :26 நாள் :27.11.2020

**தேனி மாவட்டம்**
**விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது.**

********

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (27.11.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது.

தேனி மாவட்டத்தில் இயல்பான ஆண்டு சராசரி மழை அளவு 829.80 மி.மீ ஆகும். கடந்த அக்டோபர் மாதம் முடிய 631.45 மி.மீ மழை பெறப்பட்டுள்ளது. நவம்பர் மாதத்தில் இதுவரை 200.15 மி.மீ என ஆக மொத்தம் 831.60மி.மீ மழை பெறப்பட்டுள்ளது. மாவட்டத்தில் அக்டோபர் 2020 வரை நெல் 5897 ஹெக்டேரும், சிறுதானியம் 14624 ஹெக்டேரும், பயறு வகையில் 8509 ஹெக்டேரும், எண்ணெய்வித்துக்கள் 2789 ஹெக்டேரும், பருத்தி 1509 ஹெக்டேரும், கரும்பு 2606 ஹெக்டேரும் ஆக மொத்தம் 35934 ஹெக்டேர் பரப்பிற்கு பயிர் சாகுபடி பரப்பு ஒத்திசைவு செய்யப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் பாரத பிரதமரின் புதுப்பிக்கபட்ட பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ராபி (சிறப்பு பருவம்) 2020-ல் சம்பா நெற்பயிர்-II செயல்படுத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், தேனி மாவட்டத்தில் ராபி சிறப்பு பருவத்தில் சம்பா நெற்பயிர், ஆண்டிபட்டி, கண்டமனூர், இராஜதானி, போடிநாயக்கனூர் உட்பட 14 குறுவட்டங்களில் குறுவட்டங்களில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் காப்பீடு செய்வதற்கான காலக்கெடு சம்பா நெற்பயிருக்கு 30.11.2020 ஆக இருக்கும் பட்சத்தில், தற்போது வரை **112.08** ஏக்கருக்கு **106** விவசாயிகள் காப்பீடு செய்துள்ளனர்.

ராபி (இதர பயிர்கள்) பருவத்திற்கான செயல்படுத்தும் அறிவிப்பு ஆணை (Go ahead order) பெறப்பட்டு சோளம், கம்பு, மக்காச்சோளம், துவரை, உளுந்து, பாசிபயறு, நிலக்கடலை, பருத்தி, கரும்பு உள்ளீட்ட 9 வகையான பயிர்கள் குறு வட்ட அளவில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. கம்பு மற்றும் சோளத்திற்கு காப்பீடு செய்வதற்கான கடைசி தேதி 21.12.2020, மக்காச்சோளம், துவரை, உளுந்து, பாசிபயறு, நிலக்கடலை ஆகிய பயிர்களுக்கு காப்பீடு செய்வதற்கான கடைசி தேதி 18.01.2021, பருத்தி பயிருக்கு காப்பீடு செய்வதற்கு கடைசி தேதி 01.03.2021 மற்றும் கரும்பு பயிருக்கு காப்பீடு செய்வதற்கு கடைசி தேதி 31.10.2021-ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தென்னை சாகுபடி விவசாயிகளுக்கு தென்னை மர பயிர் காப்பீட்டு திட்டம் (Coconut Palm Insurance Scheme) 2020-21-ன் கீழ் இலக்கு 6650 பெறப்பட்டு வட்டார அளவில் பிரித்தளிக்கப்பட்டுள்ளது. வேளாண்மை விரிவாக்க மையங்களில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு நெல் விதைகள் (கோ.51) 19.000 மெ.டன்னும் சிறுதானியமான கம்பு விதை 1.500 மெ.டன்னும், உளுந்து, பாசிப்பயறு மற்றும் தட்டைப் பயிர் போன்ற பயறு வகை விதைகள் 25.000 மெ.டன்னும், எண்ணெய் வித்துப் பயிர்களில் நிலக்கடலை விதைகள12.000 மெ.டன்னும் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மேலும் சாகுபடிக்குத் தேவையான உரங்களான யூரியா1836 மெ.டன்னும், DAP 302 மெ.டன்னும், பொட்டாஷ் 1363 மெ.டன் மற்றும் கலப்பு உரங்கள் 2736 மெ.டன்னும் தனியார் நிறுவனங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. உழவர் கடன் அட்டை (KCC) சிறப்பு முகாமில் கலந்து கொண்ட விவசாயிகளில் 6130 நபர்களுக்கு உழவர் கடன் அட்டை வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய விவசாயிகளுக்கு உழவர் கடன் அட்டை பெற்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிரதம மந்திரி நுண்ணீர்ப்பாசன திட்டத்தின் கீழ் (PMKSY) தேனி மாவட்டத்தில் சொட்டு நீர் பாசனத்திற்கு 4250 எக்டர் பரப்பில் ரூ.27.35 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து விவசாயிகளும் தங்கள் வட்டாரத்திலுள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்ததை அணுகி அரசு மானியத்தல் சொட்டு நீர் பாசனம் அமைத்து பயன்பெறலாம்.

மேலும் புதிதாக சொட்டு நீர் பாசனம் பதிவு செய்யும் விவசாயிகளுக்கு துணை நீர் மேலாண்மை திட்டத்தின் கீழ் தரைநிலை அல்லது மேல்நிலைத்தொட்டிக்கு ஒரு கன அடிக்கு 350 வீதம் அதிகபட்ச மானியம் ரூ.40,000/-ம், போடி, இராசிங்காபுரம், சின்னமனூர், கம்பம், மார்க்கையன்கோட்டை மற்றும் கண்டமனூர் ஆகிய ஆறு குறு வட்ட விவசாயிகளுக்கு மட்டும் ஆழ்துளை கிணற்றுக்கு மானியம் ரூ.25,000/- வழங்கப்படுகிறது. மேலும் பைப்லைன்க்கு ரூ.10,000/-ம் பம்ப்செட்டிற்கு ரூ.15,000/-ம் மானியமாக வழங்கப்படுகிறது.

வேளாண்மைத்துறை திட்டங்களை விவசாயிகள் மத்தியில் உடனுக்குடன் கொண்டு செல்ல **உழவன் செயலி** பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் புதிய சாகுபடி திட்டங்கள் குறித்த விபரம் மட்டுமின்றி வானிலை குறித்த தகவல்களும் உடனுக்குடன் வெளியிடப்பட்டு வருகின்றன. இதுவரை மாவட்டத்தில் 11,444 விவசாயிகள் உழவன் செயலியை பதிவிறக்கம் செய்துள்ளனர்.

தேனி மாவட்டத்தில் தென்னையை தாக்கும் **“ருகோஸ் என்னும் வெள்ளை சுருள் ஈ”** கட்டுப்படுத்த தண்ணீரை வேகமாக பீச்சி அடிப்பதற்று 1 ஹெக்டேருக்கு ரூ.1000/- ம், மஞ்சள் ஒட்டும் பொறி வைத்து கட்டுப்படுத்த 1 ஹெக்டேருக்கு ரூ.800/-ம், கிரைசோபெர்லா ஒட்டுண்ணி வயல்வெளியில் வெளியிட்டு கட்டுப்படுத்த 1 ஹெக்டேருக்கு ரூ.300/-ம் ஆக மொத்தம் ஒரு விவசாயிக்கு ரூ.2100/- ஹெக்டேர் வீதம் மான்யம் வழங்கப்பட்டு வருகிறது.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2500 ஹெக்டேர் பரப்பினை இலக்காக கொண்டு, மக்காச்சோளம் சாகுபடி செய்து வரும் விவசாயிகளுக்கு படைப்புழுவினை கட்டுப்படுத்த விதை நேர்த்தி செய்யும் பொருட்டு 15 முதல் 20 நாட்களில் அசாடிராக்டின் தெளிப்பு செய்யவும், 40 முதல் 45 நாட்களில் பரிந்துரைக்கப்பட்ட பயிர் பாதுகாப்பு மருந்துகளை தெளிப்பதற்கு, பின்னேற்பு மான்யமாக ஒரு விவசாயிக்கு 1 ஹெடேருக்கு ரூ.2000/- வீதம் அதிகபட்சமாக 2 ஹெக்டேர் பரப்பிற்கு மான்யம் வழங்கப்பட்டு வருகிறது.

தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயறு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு விதை, இடுபொருட்கள், இயந்திரங்கள் ஆகியவை 50% மான்யத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களின் மூலம் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட உழவர் அலுவலர் தொடர்பு திட்டம் 23.11.2020 முதல் தேனி மாவட்டத்தில் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை சார்ந்த அனைத்து களப்பணியாளர்களும் வாராத்தின் அனைத்து வேலை நாட்களிலும் பஞ்சாயத்து வாரியாக விவசாயிகளுக்கு, அக்கிராமங்களில் உள்ள தொடர்பு விவசாயிகளின் வாயிலாக வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டு, இதன் மூலம் விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்பங்கள் பற்றி தெரிவிப்பதோடு வயல்வெளி பிரச்சினைகளையும் உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் உட்பட பல்வேறு திட்டங்கள் மற்றும் அதன் பயன் குறித்து இக்காணொலி கூட்டத்தின் வாயிலாக விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், தேனி மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் மூலம் அமைக்கப்பட்ட பண்ணைக்குட்டைகளில் தற்பொழுது கிடைத்த மழையினால் நிரம்பியுள்ளதாக இக்கூட்டத்தில் விவசாயிகள் தெரிவித்தனர். மேலும் தேவைப்படும் பகுதிகளில் தடுப்பணைகள் அதிக அளவில் அமைத்திடவும், கூடலூர் பகுதியில் புதிய உழவர் சந்தை அமைத்திடவும், ஒட்டன்குளம் சுரங்கநாதன் நீர் வீழ்ச்சி நீரை சேமித்து விவசாயத்திற்கு பயன்படுத்திடவும், வெற்றிலைப் பயிரில் புதிய ரகங்கள் அறிமுகப்படுத்தி அதனை பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர்க்கவும், வெற்றிலையில் மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிக்க ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும், கூண்டு முறையில் மீன் வளர்க்க பயிற்சி அளிக்கவும் மற்றும் வேளாண்மைத் துறையில் நீர் தேக்க தொட்டிக்கு வழங்கப்படும் மானியத்தினை அதிகப்படுதிடவும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் காணொலி காட்சி வாயிலாக விவசாயிகள் முன் வைத்தனர். விவசாயிகளின் கோரிக்கையினை பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வன அலுவலர் எஸ்.கௌதம், இ.வ.ப., மேகமலை வன உயிரின காப்பாளர் சச்சின் போஸ்லே துக்காரம், இ.வ.ப., மாவட்ட வருவாய் அலுவலர், க.ரமேஷ், வேளாண்மை இணை இயக்குநர் ததி.அழகுநாகேந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர், பெ.திலகவதி, அனைத்து துறை மாவட்ட அளவிலான அலுவலர்கள் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**